தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: திரு. மு.மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ).,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.133/மா/2021
நாள். 03 .02.2022

திரு. M.P. பிரசாந்த்,
சென்னை – 600 095. – முறையீட்டு மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டல அலுவலர் –11 – எதிர்மனுதாரர்

சென்னை, நொளம்பூர், மாதாகோயில் நகர், எண்.14, 2வது தெருவில் வசிக்கும் திரு.M.P. பிரசாந்த் என்பவரின் 15.12.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.12.2021–ல் பெறப்பட்டு 133/மா/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை, நொளம்பூர், மாதாகோயில் நகர், எண்.14, 2வது தெருவில் வசிக்கும் திரு.M.P.பிரசாந்த் என்பவர் தனது 15.12.2021 நாளிட்ட மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

சென்னை மாவட்டம், மத்திய சென்னை வருவாய் கோட்டம், மதுரவாயல் வருவாய் வட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி, 11வது மண்டலம், V7 நொளம்பூர் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட, 143வது வார்டு, நொளம்பூரில் புல எண்.162/1,2 இல் வகைப்பாடு – கிராமநத்தம், சேரிநத்தம் இடம் உள்ளது. அந்த இடத்தில் அதிகபட்சமாக 950 வீடுகள் இலவசமாக கிராமநத்தம் பட்டா மூலம் பொதுமக்கள் வசித்து வருகிறார்கள்.

அந்த இடத்தில் மாதா கோயில் நகர், யூனியன் சாலையில் 1வது தெரு முதல் 8வது தெரு வரை எதிரில் உள்ள கூவம் ஆற்று ஓரமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் பள்ளத்தில் மணல் வைத்து மேடாக்கி சமப்படுத்தப்பட்டு ஓலை குடிசை அமைத்து மளிகை கடை நடத்தி வரும் 5வது தெருவைச் சேர்ந்த திருமதி. அமுதா என்பவர் அமைத்துள்ளார். திரு. ராமு என்பவர் 1 கிரவுண்ட் இடம் சாலையை ஆக்கிரமித்து ஓலை குடிசையில் மாட்டு கொட்டகை அமைத்து ஆக்கிரமித்துள்ளார். திரு. குமாரசாமி என்பவர் 1 செண்ட் இடம் சாலையை ஆக்கிரமித்து டீ கடை வைத்து ஆக்கிரமித்துள்ளார். திரு. சொ.முருகன் என்பவர் அவருடைய சொந்த 3 கார்களை நிறுத்தி ஆக்கிரமித்து வைத்துள்ளார். மற்றும் வாகனம் பழுதுபார்க்கும் கடையை

வைத்துக்கொண்டு தேவையற்ற 50க்கும் மேற்பட்ட வாகனத்தை சாலையில் இடையூராக வைத்துக்கொண்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனால் மாதா கோயில் நகர் யூனியன் சாலை ஆக்கிரமிப்பால் குறுகி வாகனம் நெரிசல் ஏற்படுகிறது. அதனால் வாகன ஓட்டிகள், ஆம்புலன்ஸ் வாகனம், பள்ளி வாகனம் போன்ற வாகனங்கள் செல்ல முடியவில்லை. நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளது. அதற்கிடையில் சாலையில் வாகனம் நெரிசல் மிக அதிகமாகிறது.

மேற்படி ஆக்கிரமித்தல் சம்மந்தமாக கடந்த 02.03.2020 தேதியில் இருந்து பல மனுக்கள் சென்னை மாநகராட்சி உயர் அதிகாரிகளுக்கு மற்றும் பதிவுத்தபால் மூலமாக மேற்படி ஆக்கிரமிப்புகள் அகற்றக்கோரி மனு அளித்திருந்தேன். அந்த மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் தமிழ்நாடு முதலமைச்சர் தனிப்பிரிவில் அளித்துள்ள மனுக்கள் தேதி விபரம் – 16.11.2020, 07.02.2021, 25.02.2021, 10.03.2021, 20.03.2021, 13.06.2021 மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் இணையதளத்திலும் அளித்துள்ள மனுக்கள் தேதி விபரம் – 16.11.2020, 07.02.2021, நம்ம சென்னை APP இணையதளம் வாயிலாகவும் புகைப்படம் ஆதாரத்துடன் 22 புகார் பதிவு செய்திருந்தேன். தற்போதைய தேதி வரை ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. இது சம்மந்தமாக 143வது வார்டு உதவி செயற்பொறியாளரிடம் (Assistant Engineer) தொலைபேசியில் தொடர்புகொண்டு தகவல் கேட்டேன். ஆக்கிரமிப்புகளை அகற்றி விடுகிறேன் என்றார். 21 மாதங்கள் கடந்து விட்டது. தற்போதைய தேதி வரை ஆக்கிரமிப்பு எடுக்க தயங்கியும், மெத்தனமாக செயல்பட்டு வருகிறார்கள் சென்னை மாநகராட்சி 11வது மண்டலம் அதிகாரிகள்.

கடந்த 18.01.2020 அன்று மதியம் 12 மணியளவில் சென்னை மாநகராட்சி 11வது மண்டலம் அதிகாரிகள் மேற்படி குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தின் மிக அருகில் சிறிய ஷீட் (Small tent sheet roof closed shops) போடப்பட்ட மளிகை கடை இருந்தது. அதை அன்று சென்னை மாநகராட்சி அதிகாரிகளால் தயவுதாட்சனையின்றி உடனடியாக ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. ஆனால் அதன் அருகில் ஓலை குடிசையில் அமைக்கப்பட்டு இருந்த திருமதி. அமுதா (மளிகை கடை), திரு. ராமு (மாட்டு கொட்டகை), திரு. குமாரசாமி (டீ கடை), (வாகனம் பழுது பாக்கும் கடை தேவையற்ற வாகனங்களை வைத்து ஆக்கிரமித்தவர்களை மட்டும் ) விட்டுச் சென்றுள்ளனர்.

சென்னை மாநகராட்சி 11–வது மண்டலம் அதிகாரிகள் ஆக்கிரமிப்பாளர் திருமதி. அமுதாவிற்கும் மற்ற ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உடந்தையாக செயல்பட்டு ஆக்கிரமிப்பு எடுக்காமல் இருக்க அவர் கொடுக்கும் லஞ்சம் பணத்தை பெற்றுக்கொண்டு, நான் அளிக்கும் அனைத்து மனுவையும் கிடப்பில் போட்டு அரசு அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி சட்டத்துக்கு புறம்பாக செயல்பட்டு வரும் சென்னை மாநகராட்சி 11வது மண்டலம் அலுவலர்கள் விவரம்:–

1) உயர்திரு. மண்டல அலுவலர் (11வது மண்டலம் சென்னை மாநகராட்சி) அவர்கள்,

2) உயர்திரு. செயற்பொறியாளர் (11வது மண்டலம் சென்னை மாநகராட்சி) ) அவர்கள்,

3) உயர்திரு. உதவி செயற்பொறியாளர் (11வது மண்டலம் சென்னை மாநகரராட்சி) அவர்கள்,

4) உயர்திரு. உதவி செயற்பொறியாளர் (143வது வார்டு, 11வது மண்டலம், சென்னை மாநகராட்சி)

மேற்படி சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கையும் மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் தெரிவிப்பது நான் அளித்த மனுவில் குறிப்பிட்டுள்ள நொளம்பூர், மாதா கோயில் நகர், யூனியன் சாலையை ஆக்கிரமித்து சாலை வாகனம் நெரிசலை ஏற்படுத்திய அனைத்து ஆக்கிரமிப்புகளையும் உடனடியாக தயவுதாட்சன்யமின்றி ஆக்கிரமிப்பு அகற்றி மறுபடியும் சாலையை ஆக்கிரமிப்பு ஏற்படாமல் தடுக்க 143வது வார்டு உதவி பொறியாளர் அவர்கள் கண்காணிக்க வேண்டும் என்று சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக விசாரித்து ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்யப்படுகிறது.

2) இப்புகார் மனு தொடர்பான அறிக்கையை அனுப்புமாறு 22.12.2019 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடமிருந்து இது தொடர்பான அறிக்கை இம்முறைமன்றத்தில் பெறப்படவில்லை. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 31/01/2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.01.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் திரு.M.P.பிரசாந்த் 31.01.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“சென்னை நொளம்பூர் மாதா கோவில் நகர் யூனியன் சாலையில் எதிரில் உள்ள கூவம் ஆற்று ஓரம் உள்ள இடத்தை ஆக்கிரமித்து அங்கு மளிகை கடை, வாகனம் பழுது பார்க்கும் கடை போன்ற கடைகள் சுமார் 13 கடைகளை இட ஆக்கிரமிப்பு செய்து சிலர் நடத்தி வருகின்றனர். ஆரம்பத்தில் அங்கு வெறும் 4 கடைகள் மட்டுமே இருந்த நிலையில் தற்போது 13 கடைகளாக மாறியுள்ள நிலையில், அங்கு வாகன நெரிசல் அடிக்கடி ஏற்படுகின்றன. இது தொடர்பாக மாநகராட்சி அலுவலர்களுக்கும், காவல் துறைக்கும் புகார்கள் அனுப்பப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட இடத்தில் ஒரு மளிகை கடை இருந்தது. அதனை மாநகராட்சி அலுவலர்களால் உடனடியாக அகற்றப்பட்டது. ஆனால், அங்கு இயங்கி வந்த மற்ற கடைகளை அகற்ற மாநகராட்சி அதிகாரிகள் தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து, மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்து இயங்கி வரும் கடைகளை அகற்றிட உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

4) எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் –11ஐச் சேர்ந்த உதவிபொறியாளர் 31.01.2022 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“ பெருநகர செனை மாநகராட்சி மண்டலம்11 கோட்டம் 143க்கு உட்பட்ட நொளம்பூர் யூனியன் எதிரில் உள்ள கூவம் ஆற்று ஓரம் உள்ள இடத்தை ஆக்கிரமித்து அங்கு மளிகை கடை, வாகனம் பழுது பார்க்கும் கடை போன்ற கடைகள் இட ஆக்கிரமிப்பு செய்து சிலர்

நடத்தி வருகின்றனர். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிட பாதுகாப்பு வேண்டி காவல்துறை உதவி ஆணையர் மற்றும் காவல்துறை ஆய்வாளருக்கு கடிதங்கள் எழுதியும் காவல்துறையினர் பாதுகாப்பு அளிக்க வராததால், மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற இயலவில்லை, தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ளதால், தேர்தல் நடத்தை விதிமுறை முடிவுக்கு வந்த பின்னர், காவல் துறை உதவி ஆணையரை தொடர்பு கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற பாதுகாப்பு அளித்திடுமாறும், மேலும் ஆக்கிரமிப்புகளை அகற்றிட குறிப்பிட்ட நாளை ஒதுக்குமாறும் மாநகராட்சி உதவி ஆணையர் மூலம் கேட்டுக்கொள்ளப்படும் என்றும், மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை இன்னும் 3 மாத காலத்திற்குள் அகற்றப்படும் என்றும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மண்டல அலுவலர் 11 அவர்களின் 29.1.2022 நாளிட்ட கடிதத்தையும் மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்–11 தனது 29.01.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"மனுதாரர் கோரிய பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, பகுதி–32 கோட்டம்–143க்குட்பட்ட பகுதியில் மாதாகோயில் நகர், யூனியன் சாலை முந்தைய நொளம்பூர் பஞ்சாயத்தில் இருந்தது. 2011ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கத்தில் நொளம்பூர் பகுதி பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. கடந்த 2015–ஆம் ஆண்டு வார்டு–143 நொளம்பூர், யூனியன் சாலையானது புதுப்பிக்கப்பட்டது. மற்றும் இச்சாலையின் ஒரு பகுதி 2021ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது. இச்சாலையின் நீளம் 1200 மீட்டர் ஆகும். மற்றும் சாலையின் அகலம் மாறுபட்டுள்ளது. (12 மீ, 7 மீ 6மீ, 4.5மீ) கூவம் ஆற்று ஓரமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் மணல் வைத்து மேடாக்கி ஓலை குடிசை அமைத்து மளிகை கடை நடத்தி வரும் திருமதி.அமுதா என்பவரின் இடம் வண்டி பாட்டை நிலம் ஆகும்.(Revenue Land) அதே போல் திரு.ராமு என்பவர் ஆக்கிரமித்து ஓலை குடிசையில் மாட்டு கொட்டகை வைத்திருக்கும் இடம் வண்டிபாட்டை நிலம் ஆகும்.(Revenue Land) மற்றும் திரு.குமாரசாமி என்பவர் ஆக்கிரமித்து டீ கடை வைத்திருக்கும் இடம் (நீர்நிலை இடம்) பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடமாகும். திரு. கோ.முருகன் என்பவர் சொந்தமான மூன்று கார்களை நிறுத்தியும், வாகனங்களை பழுது பார்க்கும் கடை மற்றும் தேவையற்ற வாகனத்தை வைத்து ஆக்கிரமித்து செய்துள்ள இடம் (நீர்நிலை இடம்) பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு பாதுகாப்பு வேண்டி காவல் துணை ஆணையாளர், காவல் உதவி ஆணையாளர் மற்றும் காவல் ஆய்வாளருக்கு பின்வரும் தேதிகளில் 11.02.2021, 25.06.2021, 20.07.2021 மற்றும் 14.09.2021 அன்று முறைப்படி ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு பாதுகாப்பு வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள் வரை காவல் துறையிடமிருந்து பாதுகாப்பு சம்மந்தமாக தகவல்கள் ஏதும் பெறப்படவில்லை.

மேலும் தற்போது உள்ளாட்சி(2022) தேர்தல் நடத்தை விதி அமலில்(MCC) இருப்பதால் தேர்தல் முடிந்த பின்னர் காவல்துறையிடம் பாதுகாப்புக்கு அனுமதி பெற்று வண்டிபாட்டை

(Revenue Land) நிலமாகிய திருமதி.அமுதா என்பவரின் மளிகை கடையும் மற்றும் திரு.ராமு என்பரின் மாட்டு கொட்டகையும் அகற்றப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல் திரு.குமாரசாமி என்பவர் டீக்கடை வைத்திருக்கும் இடம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடம் மற்றும் திரு.கோ.முருகன் என்பவர் தமக்கு சொந்தமான மூன்று கார்களை நிறுத்தியும், வாகனம் பழுது பார்க்கும் கடை மற்றும் தேவையற்ற வாகனத்தை வைத்து ஆக்கிரமித்துள்ள இடம் (நீர்நிலை இடம்) பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடம் என்பதால் பொதுப்பணித்துறையின் மூலம் அவ்விடத்தை அகற்றுவதற்கு ஆவண செய்யப்படும்'' என்று தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

5) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் –11ஐச் சேர்ந்த உதவி பொறியாளர் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் பின்வரும் விவரங்கள் அறியப்பட்டுள்ளன.

மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை நொளம்பூர் யூனியன் சாலையின எதிரில் கூவம் ஆற்றின் ஓரம் ஒரு சில நபர்களால் ஆக்கிரமிப்பு செய்து மளிகைக்கடை, டீ கடை போன்ற கடைகளை வைத்து வியாபாரம் செய்து வரும் இடம் வண்டிபாட்டை நிலம் (Revenue Land) மற்றும் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நீர்நிலை இடமாகும்.

மேலும் மேற்கண்ட இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கடைகளை முறைப்படி அகற்ற பாதுகாப்பு கேட்டு காவல் துறையினருக்கு கடிதம அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் பாதுகாப்பு சம்மந்தமாக எவ்வித தகவலும் பெறப்படவில்லை என மண்டல அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது 2022 உள்ளாட்சி தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் உள்ளதால், தேர்தல் முடிந்த பின்னர் காவல்துறை அனுமதி பெற்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என மண்டல அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்நேர்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர், நொளம்பூர் காவல்துறை துணை கண்காணிப்பாளரை நேரிலோ அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை போலீஸ் பாதுகாப்புடன் அகற்றிட நாள் மற்றும் நேரத்தை குறிப்பிட்டு பெறுமாறும், மேற்கண்ட ஆக்கிரமிப்பு இடம் வருவாய்துறை, பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடம் என்பதால், மாநகராட்சி அதிகாரிகள், வருவாய்துறை, பொதுப்பணித்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து காவல் துறையின் பாதுகாப்புடன் மேற்கூறிய இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை (3) மூன்று மாத காலத்துக்குள் அகற்றிடுமாறும் இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான தகுந்த பாதுகாப்பு அளிப்பது குறித்து சென்னை காவல்துறை ஆணையரிடம் பெருநகர சென்னை மாநகராட்சி உயர்

அலுவலர்கள் கலந்து ஆலோசிக்க தக்க அறிவுறுத்தல்கள் வழங்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2022–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.M.P.பிரசாந்த், BCA. B.L., BGL.,
எண்.14, 2–வது தெரு, மாதா கோயில் நகர்,
நொளம்பூர்,
சென்னை – 600 095.

2) மாநகராட்சி ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் -11,
பெருநகர சென்னை மாநகராட்சி,
123, ஆற்காடு சாலை
வளசரவாக்கம்,
சென்னை – 600 087.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால் துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

03/02/22

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை – 600 032